இந்திய தூதரகம்
கோலாலம்பூர், மலேசியா

## செய்தி அறிக்கை

## 3-வது அனைத்துலக யோகா தினம்

ஜூன் 21ஆம் தேதி, உலகளாவிய நிலையில் மூன்றாவது அனைத்துலக யோகா தினத்தைக் கொண்டாடும் அனைத்து அமைப்புகளையும் கோலாலம்பூரிலுள்ள இந்திய தூதரகம் வரவேற்று ஊக்கமளிக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக யோகா தினம் கோலாலம்பூர், பினாங்கு, ஜோகூர், மலாக்கா, கிளந்தான், கூச்சிங், அலோர்ஸ்டார் உள்ளிட்ட பல பகுதிகளில் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

அதேபோன்று, இவ்வாண்டும் மலேசியாவில் பல இடங்களில் யோகா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அதில் சில நிகழ்ச்சிகள் இந்திய தூதரகத்தின் ஒத்துழைப்போடு நடைப்பெறுகின்றன. அந்த வகையில், அனைத்துலக இந்திய வம்சாவளியினரின் அமைப்பான கோப்பியோ இந்திய தூதரகத்துடன் இணைந்து எதிர்வரும் ஜூன் 18, 2017 ஞாயிற்றுகிழமை காலை 7.30 முதல் காலை 9.30 வரை கிள்ளானில் யோகா நிகழ்ச்சியை நடத்தவுள்ளது. இந்த நிகழ்வினை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய கலாச்சார மையத்தின் யோகா பயிற்றுநர் கேம்சந்த் குப்தா அவர்களின் தலைமையில் நடைபெறும்.

மேலும், இந்த மூன்றாம் ஆண்டு யோகா தினத்தை முன்னிட்டு நெகிரி செம்பிலானிலுள்ள பத்ம நிருத்யாலாயா ஆர்ட்ஸ் நடன பள்ளி நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய கலாச்சார மையத்தோடு இணைந்து ‘நாட்டிய சாஸ்திரம் விஸ்வமார்க்கம் -உலகளாவிய பாதை’ என்ற கருப்பொருள் கொண்ட பரதநாட்டிய நிகழ்ச்சியை படைக்கவுள்ளது. இந்த நாட்டிய நிகழ்ச்சியை இந்தியாவின் புகழ்பெற்ற பரதநாட்டிய கலைஞர் பத்மபூஷன் டாக்டர் பத்மா சுப்ரமண்யமும் அவரின் நடன குழுவினரும் இணைந்து ஜூன் 18, 2017 ஞாயிற்றுகிழமை மாலை 7.00 மணிக்கு சந்தானந்த் அரங்கில் படைக்கவுள்ளனர்.

தொடர்ந்து, ஜூன் 21, 2017 புதன்கிழமை அன்று, மலேசிய யோகி பேரவை காலை 6.30 முதல் 9.30 வரை மற்றும் மாலை 6.30 முதல் இரவு 9.30 வரை என இரண்டு யோகா நிகழ்ச்சிகளை டத்தாரான் மெர்டேக்காவில் நடத்தவுள்ளது. இந்நிகழ்வில் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். தவிர, இந்து பேரவை சங்கமும் சில பள்ளிக்கூடங்களில் யோகா நிகழ்ச்சியை நடந்தவுள்ளனர்.

அதனை தொடர்ந்து, ஜூலை 2ஆம் தேதி, கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம், இந்து தர்ம மாமன்றம், தி ஆர்ட் அஃப் லிவிங் மலேசியா, MURFEST, IM4U போன்ற மற்ற அமைப்புகளும் இணைந்து 5,000 யோகா ஆர்வலர் கலந்து கொள்ளும் மிகப் பெரிய யோகா நிகழ்ச்சியை டத்தாரன் மெர்டேக்காவில் காலை 6.00 முதல் பிற்பகல் 12 வரை நடத்தவுள்ளனர்.

2016ஆம் ஆண்டு ஐக்கிய நாட்டுசபை பொதுகூட்டத்தில், மாண்புமிகு இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் யோக தினத்தை ஒட்டி முன்வைத்த தீர்மானத்தை ஐநா வெற்றிகரமாக நிறைவேற்றியதை அடுத்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21ஆம் தேதி யோகா தினமாக கொண்டாடப்படுகின்றது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய கலாச்சார மையத்தின் யோகா ஆசிரியர் திரு அஜய் குமார் சஹோ அவர்கள் மலாய்-ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் எழுதிய 'பூரண சுகாதாரத்திற்கு யோகா' என்ற புத்தகம் 2015ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி மலேசியாவிற்கான அதிகாரத்துவ வருகையின் போது வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜூன் 18 தொடங்கி 25 முதல் மலேசியா முழுவதும் பல்வேறு அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மூன்றாவது அனைத்துலக யோகா தினத்திற்கு பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி இந்திய தூதரகம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

******